**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 2ம்பிரதிவாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி வழக்கறிஞர் ஆஜர் இல்லை மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

அ.வ.எண்.266/2023

வா.சா.1 கண்ணன் த/பெ அங்கப்பன்

<u>பிரதிவாதிகள் தரப்புகுறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. அடமான ரத்து பத்திரம் மற்றும் கிரைய உடன்படிக்கை ரத்து செய்த பத்திரங்களையும் ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் உள்ளது. 04.09.2019 தேதியில் கிரைய பத்திரம் எழுதப்பட்டபோதுதான் 2 ரத்து பத்திரங்கள் இரண்டும் எழுதப்பட்டதா என்றால் சரிதான்.

2. மேற்கண்ட 3 ஆவணங்களிலும் ஒரே நபர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. 3 பத்திரங்களுக்கும் நான் செலவு செய்தேன். எவ்வளவு செலவானது என்று சொல்லமுடியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வீரபத்திர வீதியில் உள்ள மாரியப்பன் மகன் ராஜு என்பவர் என்னுடைய நண்பரா என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.